**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT MUNSIF, TENKASI.**

O.S.No.415/2021

Deposition of witness for DW2

| | | |
|---|---|---|
| Name | : | பெஞ்சமின் சாமுவேல் |
| Father's Name | : | தேவதாசன் |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | 68 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 12.02.2026.

முதல் விசாரணை:

நான் இந்த வழக்கில் 7ம் பிரதிவாதி நிறுவனத்தில் பணிபுரிந்துவருகிறேன். என்னுடைய முதல் விசாரணைக்காக நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். இந்த நிரூபண வாக்குமூலம் என்னுடைய தகவலின் அடிப்படையிலேயே தயார் செய்யப்பட்டுள்ளது. நிரூபண வாக்குமூலத்தை படித்துப்பார்த்து உண்மை என உறுதி கூறி கையொப்பம் செய்துள்ளேன்.

1. 01.04.2025 தேதியில் எனக்கு சாட்சியம் அளிக்க 7ம் பிரதிவாதி கொடுத்தஅதிகார கடிதம் பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (மேற்படி ஆவணம் வாதி தரப்பில் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)

2. 24.09.1979 ல் முத்தையாத்தேவர் பெயரில் எழுதிக்கொடுக்கப்பட்ட நன்கொடை ஆவணம் சார்பதிவாளர் நகல் பி.வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 04.05.2005ல் பார்வதி பெயருக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட பொது அதிகார ஆவணம் சார்பதிவாளர் நகல் பி.வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 24.06.2005ல் 7ம் பிரதிவாதி பெயருக்கு எழுதிய கிரைய ஆவணம் சார்பதிவாளர் நகல் பி.வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 30.12.2005ல் 7ம் பிரதிவாதி, 6ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் சார்பதிவாளர் நகல் பி.வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(பி.வா.சா.ஆ.9.10 ஆவணங்களில் 7ம் பிரதிவாதிதான் எழுதிக்கொடுத்தவரும், எழுதிவாங்கியவருமாக இருக்கும் சமயத்தில் அசல் ஆவணத்தை தாக்கல் செய்யாத காரணத்தை தெரிவிக்காததாலும் எந்த காரணத்திற்காக 2ம் நிலை சான்றாவணம் தாக்கல் செய்யும் காரணத்தை தெரிவிக்காததாலும் மேற்படி 2 ஆவணங்களும் குறியீடு செய்ய கூடாது என வாதி மற்றும் 4,5 பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது. மேற்படி ஆட்சேபனை வழக்கின் இறுதிவிசாரணையின்போது பரிசீலனை செய்யப்படும்)

6. 6, 7 பிரதிவாதிகள் பெயரில் உள்ள பட்டா எண்.311 இணைய வழி பதிவிறக்க நகல் பி.வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய முதல் விசாரணை தொடர்ச்சி மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒம்/-K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி